அப்படி பாதுகாப்பு கொடுப்பதானது, பிரதமருக்கோ அல்லது தலைவருக்கோ மட்டுமல்ல, மக்களுக்கும் சேர்த்துத்தான் என்பதை அரசு உணருகிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பாதுகாப்பு அனைவருக்கும் சேர்ந்து அளிக்கப்படவேண்டுமென்று அரசு உணர்ந்த காரணத்தால் தான், அதிலும் முக்கியமாக நாட்டின் பிரதமருக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிற காரணத்தால் தான் நான் இந்த வகையிலே பதில் கூறி வருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, பிரதமரின் சுற்றுப்பயணம் சம்பந்தமாக ஒரு விதிமுறைகள் இருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த விதிமுறைக்குட் பட்டுத்தான் அவர்கள் கட்சிக் கூட்டங்களுக்கு வரும்போது, கட்சி மேடை அமைப்பதற்கும் இந்த மாநில அரசு செலவு செய்ய வேண்டுமென்று இருக்கிறதா? இல்லையென்று சொன்னால், அந்தச் செலவை மாநில அரசு ஏற்றுக்கொள்ளமுடியாது, அந்த விதி முறைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு இந்த அரசாங்கம் தெரிவித்தது உண்டா? அதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து என்ன பதில் வந்தது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாம் ஒன்றும் மறுப்புத் தெரிவிக்கவில்லை. பிரதமர் சுற்றுப்பயணம் என்கிற விதிமுறை வகுக்கப்பட்டு அது எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு இருக்கிற காரணத்தால், அதை ஏற்றுக்கொண்டோம். இந்த சிறிய பிரச்னைகளில் அத்தகைய பெரிய தகராறு பிரதமரோடோ, அல்லது மத்திய சர்க்காரோடோ வைத்துக் கொள்ள வேண்டா மென்று இந்த அரசு பெருந்தன்மையோடு கருதுகிறது.

அரசிதழ் பதிவுபெறு அலுவலர் இடமாற்றம்

* 432. வினா—**திரு. அ. தேவேந்திரன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை பகிப்பாரா—

அரசிதழ் பதிவுபெறுத அலுவலர்கள் இடமாற்றம் செய்யப் படும்போது அவர்களது மாத ஊதியம் தாமதமின்றி கிடைக்கச் செய்ய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

1975 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசிதழ் பதிவுபெறாத அலுவலர் தாம் மாற்றப்பட்டுள்ள புதிய ஊரில் சம்பளம் பெறுவதற்கு அவசியமான நேர் முன் ஊதியச் சான்றிதழின் Last Pay Certificate நகலொன்றைச் சம்பந்தப்பட்ட அலுவலரிடமே கொடுத்துவிட வகை செய்யப்பட்டுள்ளது; இந்த ஏற்பாட்டின் மூலம் அந்த அலுவலர் அப்புதிய ஊரில் அச்சம்பளச் சான்றிதழைக் கொடுத்து, தமது சம்பளத்தைத் தாமதமின்றி பெற்றுக்கொள்ள இயலும்.

திரு. அ. தேவேந்திரன்: தலைவரவர்களே, பொதுவாக அரசிதழ் பதவிபெறாத ஊழியர்கள் மாற்றப்படும்போது, அவர்களுக்கு சம்பளம் கிடைக்க காலதாமதம் ஆகிறது—அவர்கள் கடைசியாக வாங்கிய சம்பள சர்ட்டிபிகேட் ஏ.ஜி. ஆபீஸிலிருந்து வரவேண்டு மென்றும், அதனால் 2-3 மாதங்கள் ஆகிவிடுகிறது என்றும் சொல்லப் படுகிறது. அது உண்மையா? அப்படிப்பட்ட காலதாமதம் இல்லாமல் சம்பளம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நாம் எடுக்கப்பட்ட சிறந்த, சீரிய நடவடிக்கையைக் குறிப்பிட்ட பிறகும் மாண்புமிகு உறுப்பினர் காலதாமதம் ஆகிறது என்கிற வகையிலே அவர்களுடைய கேள்வியை எடுத்து இருக்கின்றார். இப்படிப்பட்ட காலதாமதங்கள் என்.ஜி.ஜி.ஓ. சங்கத்தின் சார்பாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு 1972 ஜூன் 12-ம் தேதி பிறப்பிக்கப்பட்ட புதிய ஆணையின்படி சம்பளம் பெற்றுக் கொள்ளும், மெட்ராஸ் டிரஷரி கோட் என்கிற விதிகளில் கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றது.

"அரசிதழ் பதிவு பெறாத அலுவலர் ஒருவர் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றலாகிச் செல்லும்போது--இரண்டு 'லாஸ்ட் பே சர்ட்டிபிகேட்' நகல்கள் தயாரித்து—அவற்றில் ஒன்றை மாற்றலாகிச் செல்லும் அலுவலர் கையிலும், மற்றொன்றை அஞ்சல் மூலமாகவும் அனுப்பவேண்டும்—மாற்றலாகிச் செல்லும் அலுவலர் கொண்டு செல்லும் சர்ட்டிபிகேட்டை சம்பள பில்லில் சேர்த்து சம்பளத் தொகையை பெற்றுக்கொள்ள வழி செய்ய வேண்டும். அஞ்சலில் பெறப்படும் நகலை அலுவலகத்தில் அலுவலர் நேரில் தந்த சான்றிதழோடு ஒப்பு நோக்கிக் கொள்ளலாம்." ஏற்கனவே ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஒரு அலுவலர் மாற்றலாகிச் செல்வாரானால் அங்கே அவர் சென்ற

2-3 மாதத்திற்குப் பிறகு தான சம்பளம் வாங்க முடியும் என்ற சூழ்நிலை இருந்தது. காரணம், அவர் கடைசியாக பெற்ற சம்பளம் 'லாஸ்ட் பே' என்பதற்கான சான்றுகள் உடனடியாகக் கிடைக்காமல் இருந்ததுதான். அதை அனுப்பி வைக்க 2 மாதம், 3 மாதம் ஆகிற சூழ்நிலை இருந்தது. அதை மாற்றுவதற்கான வகையில், தற்போது மாற்றலாகிச் செல்லும்போதே அவர் கையில் 'லாஸ்ட் பே சர்ட்டிபிகேட்' நகல் ஒன்று கொடுத்துவிடவேண்டுமென்றும், மற்றுமொரு நகலை அஞ்சல் மூலம் அனுப்பிவிடவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறோம். ஆகவே, அவர் தடங்கல் இல்லாமல் உடனடியாக சம்பளம் பெற்றுக்கொள்ள இப்போது வழி பிறந்து இருக்கிறது.

Teachers Provident Fund

* 433 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) whether it is a fact that private managements of Aided Schools contribute towards Teachers Provident Fund; and

(*b*) if so, the amount of contribution?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த பிராவிடென்ட் பண்டு பல தனியார் பள்ளிகளில் கொடுக்கவில்லை, என்பது சர்க்காருக்குத் தெரியுமா? கொடுக்கவில்லை என்றால் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க சர்க்கார் உத்தேசித்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பிராவிடென்ட் பண்ட் செலுத்துகிற அத்தகைய முறை, உதவி பெறும் துவக்கப்பள்ளிகள் உதவிபெறும் உயர்நிலைப் பள்ளிகள் பொறுத்தவரையில் 1964–65-ம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு, பிராவிடென்ட் முறை இல்லை. ஏனெனில் அரசாங்கமே இலவசக்கல்வி கொண்டு வந்ததால் அந்த முறை இல்லை. 1—4—64 முதல் உதவிபெறும் துவக்கப்பள்ளிகளைப் பொறுத்தும், 1—6—65 முதல் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகள் பொறுத்தும் நிறுத்தப்பட்டு விட்டது. 1—6—70 விருந்து